அறிவதற்கும் அம்மாதிரி துறைகளிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கும் இந்த அரசு ஏதாவது வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : வாய்ப்புகள் தந்தால் பெண்கள் எல்லா துறைகளிலும் இன்றைக்கு சிறப்பாக செயல்பட முடியும். இந்திய நாட்டின் பிரதமரே ஒரு பெண்ணாக இருக்கிற காரணத்தினால் வாய்ப்புகள் தரவேண்டும். அந்த வாய்ப்புகளை இன்றைக்கு நாம் அதிகமாக தருவதில்லை. இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக, மிக மிகப் பிற்போக்காக இருக்கிற பின் தங்கிய கிராம மக்களுக்குத் தான் இந்த திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கிறோம். படித்த பெண்கள் இன்றைக்கு எல்லாவிதமான வேலைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். அலுவலகங்களிலே, ஆலைகளிலே கூடப் பணி ஆற்றுகிறார்கள். எனவே, மிகத் பின் தங்கிய குக்கிராமங்களில் இருக்கிற பெண்களுக்கெல்லாம் துணிவு ஏற்படுத்தி, அவர்களுக்கு இருக்கிற அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து, அவர்களும் சமமாக வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு வீட்டிலே அடைக்கப்பட்டிருந்த பெண்களை எல்லாம் இதுபோன்ற மகளிர் மன்றங்கள் மூலமாக ஒரு நிலையிலே கொண்டு வந்து தங்களாலே பல காரியங்களைச் செய்ய முடியும். தங்களுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து பணியாற்றவேண்டுமென்ற நிலையில் அரசு திட்டங்கள் தீட்டி வருகின்றது. பெண்கள் நல்ல முறையில் இந்த இல்லங்களை நடத்துகிறார்கள், இந்த நிலையங்களை நடத்துகிறார்கள், இந்த தொழில்களை நடத்துகிறார்கள், எனவே, அவர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்றுதான் பல நல்ல திட்டங்களை எல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு உருவாக்கிக் கொண்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வெளிநடப்பு செய்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேரவைக்கு திரும்பி வந்தது குறித்து.

திரு. கு. சீமைச்சாமி : ஆன் எ. பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கவேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் இந்த பட்ஜெட் கூட்டத்திலே கலந்துகொள்ளப் போவதில்லை என்று வெளியே சென்றார்கள். இன்றும் இந்த பட்ஜெட் தொடர் கூட்டம் தான் நடைபெறுகிறது. சொன்ன சொல்லைக் காப்பற்றாமல் வந்திருக்கிறார்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் வருவதும் போவதும் அவர்களுடைய உரிமை. ஒரு உறுப்பினருடைய உரிமைப்பற்றி கேள்வி கேட்பதற்கு இன்னொரு உறுப்பினருக்கு உரிமை கிடையாது. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும், எழவில்லை என்று தெரிவித்துகொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் .

(அ) தூத்துக்குடி நகராட்சி மன்ற மதிய உணவுக் கமிட்டியில் நிதி பற்றாக்குறையும் மதிய உணவு சரிவர வழங்கப்படாமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், அதாவது— மு. ப. 10-00

"நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி நகராட்சி மன்றத்தில் மதிய உணவுக் கமிட்டியில் சுமார் ரூ. 5,000 (ஐயாயிரம்) குறைவு ஏற்பட்டு,

தூத்துக்குடி நகராட்சி உறுப்பினர்கள் எல்லோரும் நகராட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமையினால் நகராட்சிமன்றக் கூட்ட நடவடிக்கைகள் நடக்காது தடைப்பட்டு போய், மதிய உணவும் சரியாக வழங்கப்படாமல் தூத்துக்குடி நகர் மன்ற மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிலையை சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துவிட்டு விவாதிக்கக் கோருகிறேன்'' என்று.

இது சம்பந்தமாக விவாதிக்க மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதியின் (3) வது உட்பிரிவின்படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(அ) சென்னையில் மண்ணெண்ணெய் பற்றுக்குறையும், மக்கள் அல்லலும்.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Agriculture to to a matter of urgent public importance, namely, the continued scarcity of kerosene oil in the City of Madras throwing several families belonging to lower and middle class people into great hardship.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மண்ணெண்ணெய் விநியோகத்தில் இப்பொழுது ரேஷன் முறை கிடையாது. நம் மாநிலத்தில் மண்ணெண்ணெய் வழங்கும் நிறுவனங்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், கால்டெக்ஸ், பர்மாஷெல், எஸ்ஸோ ஆகியவை. சென்ற ஒராண்டாக எடுத்த புள்ளி விவரங்களின்படி சென்னை நகரத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் மாதத்திற்கு 4,200 கிலோ லிட்டர் (1 கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர் அடங்கியது) இந்த தேவைக்கு எதிராக 4,685 கிலோ லிட்டர் சென்னை நகரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 3,300 கிலோ லிட்டரை இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷனும் எஞ்சியதை மற்ற மூன்று நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் மண்ணெண்ணெயை கொச்சின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரவழைக்கின்றது. சாதாரணமாக இது கப்பல் மூலமாக வருகின்றது. இந்த நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளை நியமித்துள்ளார்கள். இந்த மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரப் பொறுப்பை கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கும், சில்லரைக்கடைகளுக்கும், கைவண்டிக்காரர்களுக்கும் ஒப்படைத்துள்ளனர். மார்ச் மாத முதல் தேதி வரை மண்ணெண்ணெய் லிட்டர் 51 பைசா நியாயவிலையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மார்ச் முதல் தேதிக்குப் பிறகு கலால் வரி ஏற்றப்பட்டுள்ளதையொட்டி லிட்டருக்கு 55 பைசாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.